23-01-2014 Dinakaran

# ஷெனாய் நகரில் இருந்து

# அண்ணாநகர் டவர் வரை சுரங்கப்பாதை தயாரானது

## மெட்ரோ ரயில் பணிகள் தீவிரம்

சென்னை, ஜன. 23: வண்ணாரப்பேட்டையில் இருந்து உயர் நீதிமன்றம், சென்ட்ரல், எல்ஐசி, கிண்டி, ஆலந்தூர் வழியாக விமான நிலையம் வரையும், சென்ட்ரலில் இருந்து எழும்பூர், கீழ்ப்பாக்கம், பச்சையப்பன் கல்லூரி, அண்ணா நகர், கோயம்பேடு, வடபழனி, ஆலந்தூர் வழியாக புனித தோமையார் மலை வரை என 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி நடக்கிறது.

கீழ்ப்பாக்கம், புது வண்ணாரப்பேட்டை, ஷெனாய்நகர், மே தின பூங்கா, பச்சையப்பன் கல்லூரி உள்ளிட்ட பகுதிகளில் சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்று வருகிறது.

ஷெனாய்நகரில் இருந்து அண்ணாநகர் கிழக்கு ரயில் நிலையத்தை கடந்து தற்போது அண்ணா நகர் டவர் ரயில் நிலையம் வரை சுரங்கம் தோண்டும் பணி முடிந்துள்ளது.



அண்ணா நகர் டவர் ரயில் நிலையத்தில் நுழைகிறது டனல் போரிங் மெஷின்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் அதிகாரி கூறும்போது, “அண்ணாநகர் கிழக்கில் இருந்து அண்ணாநகர் டவர் வரை 1,600 மீட்டர் தூரத்துக்கு சுரங்கம் தோண்டும் பணி நேற்று முடிந்தது. அங்கிருந்து திருமங்கலம் நோக்கி சுரங்கம் தோண்டும் பணி ஒரு சில வாரங்களில் தொடங்கும்“ என்றார்.